1963 மார்ச் 30] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

நேருமோ ? (ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் சூள் கொட்டினார்கள்). நாக்கை சப்பாதீர்கள். மாணவர்களுக்கெல்லாம் இந்த நிலைமை இருக்குமானால், இதைப் பொறுப்புடன் நடத்துகிறதா, அரசாங்கம் பொறுப்புடன் நடந்துகொள்கிறதா என்பதைக கவனிக்கும்பொருட்டு ஒரு வாரம் சட்டசபையை நீட்டிக்க வேண்டும். மாணவர்களுககு பூரணமாகப் பாதுகாப்பு இருக்கும் வரைக்கும் நாங்கள் சட்டசபையில் இருக்க வேண்டும்—ஒரு வாரத்திற்கு. இப்பொழுது அவர்கள் இந்தச் சபையிலே கொடுத்த தகவலின் மூலம் சட்டம், அமைதி காக்கப்படவில்லை என்பது தெரிகிறது. போலீஸ் பாதுகாப்பு மாணவர்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை. இந்த நிலையிலே அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குத் தவறிவிட்டது என்பதைக் கண்டிக்கும் நிலையிலே இருக்கிறோம் என்பதைக் குறித்து நாங்கள் வெளியேறுகிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

4. அவையுரிமைக் கேள்விகள்

( ) சென்னை நகரில் மாணவர்கள்—அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் கலவரம்பற்றி 'நவமணி' நாளிதழில் வந்துள்ள சென்னை நகரக் காவல் துறை ஆணையாளரின் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பிரிவிலேஜ் மாட்டர்ஸ்—அவை உரிமைக் கேள்விகள். முதலிலே திரு. க. இராமமூர்த்தி ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அவர் அவையில் இல்லையென்றாலும் நான் வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நானே வாசிக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. (குறுக்கீடு.) நான் என்ன செய்வது? "When a Member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made or not therein." When the Member is present, I am permitting him to read it on my behalf. But now I have got to read it.

"The Commissioner of Police, Madras on the evening of 26th March 1968 in his meeting with the Press Reporters has narrated the reasons for the clash between the Transport employees and the students which has been reported by the newspaper "NAVA MANI", dated Madras 27th March 1968 and mofussil 28th March 1968 under the headings,

"பஸ் டிரைவர் மரணம்: சம்பவம் நிகழ்ந்தது எப்படி? போலீஸ் விளக்கம்"

The copy of the same is herewith enclosed.

The narration of the Commissioner of Police, Madras, as reported alleges certain acts of commission by the students as the cause for the trouble. The statement is one which will affect the course of the judicial enquiry which was announced by the Chief Minister on the floor of the House on the forenoon of 26th March 1968.

Hence I request that this House be pleased to take note of it and refer the same to the Committee of Privileges for breach of privilege ".

உறுப்பினர் அவர்களே அவர்களுடைய கடிதத்தில் 'The statement is one which will affect the course of the judicial enquiry ' என்று அந்த ஒரே ஒரு காரணம்தான் சொல்லியிருக்கிறார்கள். That being the only reason, it would be for the Judge to take note of contempt, if any, and I do not want to and cannot trespass into the jurisdiction of the Judge who sits on the enquiry. Therefore, no *prima facie* case has been made out under Rule 188.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட போதிலும் அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளில் ஒரு விஷயத்தை மட்டும் நான் அவையில் சொல்வதன்மூலம் விளக்கவேண்டுமென்று விரும்புகிறேன். மாணவர்கள் விடுதிகளிலே உள்ள மாணவர்களுக்குப் பொதுவாக தாங்கள் தாக்கப்படக்கூடும் என்ற கலவர உணர்ச்சி, பீதி உணர்ச்சி இருப்பதைக் குறிப்பிட்டு, அவர்களுக்குப் போதுமான அளவுக்குப் பாதுகாப்பு தரப்பட வேண்டுமென்று அவர்கள் சுட்டிக் காட்டியதை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். மாணவர்கள் தாக்கப்படாமல் இருப்பதற்கு அவர்களுக்குத் தேவையான பாதுகாப்புத் தருவதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்த ஹாஸ்டலில் எந்த எந்த விதமான நிலைமைகள் இருக்கின்றன என்பதை அவ்வப்பொழுது மாலையிலும் காலையிலும் தொலைபேசி மூலமாகக் கேட்டறிந்து அவ்வப்பொழுது அந்த அந்த இடங்களுக்குப் போதுமான பாதுகாப்பு, போலீஸ் அந்த அந்த இடங்களிலே அமர்த்துவதன்மூலம் போடப்படுகின்றன. அது மட்டுமல்ல, நகர் முழுவதும் ரோந்து வருகிற போலீஸ் படையினரும் ரோந்து சுற்றிக் கொண்டே வருகிறார்கள். ஆகையால், மாணவர்கள் எந்த விதமான பீதியும் இல்லாமல் அவர்கள் ஹாஸ்டலில் வாழ்வதற்குத் தகுந்த எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியினை மாணவர் சமுதாயத்திற்கு இந்த அரசு உறுதியாக அளிக்கிறது.

MR. SPEAKER: Taking note of the additional facts mentioned by the Hon. Chief Minister, I also hold that no *prima facie* case of breach of privilege exists against the newspaper.